ECONSPEAK: A Journal of Advances in Management IT & Social Sciences,
Vol. 11, Issue 12, December 2021 Impact Factor 8.132 ISSN: (2231-4571)
www.skirec.org Email Id: skirec.org@gmail.com
An International Double-Blind, Peer Reviewed, Refereed Open Access Journal - Included in the International Indexing Directories

**தெருக்கூத்து**

:ஆசிரியர்.

முனைவர்ப.செந்தில்நாதன்&முனைவர்ப.கவிதா

முனைவர். ர.மதன்ராஜ்

தெருக்கூத்து என்பதுஇந்தியாவின்தமிழகமாநிலத்திலும், இலங்கையின் தமிழ் பேசும்பகுதிகளிலும்நடைமுறையில்உள்ளஒரு தமிழ் தெருநாடகவடிவமாகும். தெருக்கூத்து என்பதுஒருவகையானபொழுதுபோக்கு, ஒருசடங்குமற்றும்சமூகநிலையைக்கூறும்ஊடகம். தெருக்கூத்து பல்வேறுகருப்பொருள்களைகொண்டுள்ளது.

- தெருக்கூத்துஎன்பதுகிராமங்களில்திறந்தவெளிகளில்நாட்டுப்புறக்கலைஞர்களால்நடத்தப்படும்கலைவடிவம்ஆகும்.
- பழமையின்சின்னமாகவும்பண்பாட்டின்எச்சமாகவும்விளங்கும்கூத்துக்கலையானதுநாட்டுப்புறமக்களின்எண்ணங்கள்,செயல்,பண்பாடுவாழ்க்கைமுறைகளைஎடுத்துக்காட்டுகிறது.
- "கூத்தாடிகிழக்கேபார்ப்பான்கூலிக்காரன்மேற்கேபார்ப்பான்" என்றபழமொழிஒன்றுஉண்டு. கூத்துவிடியவிடியநடைபெறுவதைஇதுகுறிக்கும்.
- நாடகமேடையோகாட்சித்திரையோஇல்லாமல்எளியமுறையில்திறந்தவெளியில் தெருவிலேநடத்தப்படும்நாடோடிக்கலையேகூத்துஆகும்.
- பாரதக்கதை, இராமாயணக்கதை, அரிச்சந்திரன்கதை போன்றவற்றைதெருக்கூத்தாகநடிப்பார்கள். ஆடலும்பாடலும்கூத்தின்முக்கியஅம்சமாகும்.
    - 
    - மழையைவிரும்புவோர்விராடபருவத்தையும், மணம்விரும்புவோர்மீனாட்சுகல்யாணத்தையும், பிள்ளைபேறுவேண்டுவோர்சத்தியவான்சாவித்திரியையும்கூத்தாகநடத்துவர்.

- தெருக்கூத்தின்ஆரம்பகாலத்தில்நாட்டுப்புறநாடகவடிவத்தைக்கொண்டிருந்தது. பெரும்பாலும்மக்களுக்குதெரிந்தகாப்பியஇதிகாசஅல்லதுபுராணக்கதையைஅடிப்படையாககொண்டுகூத்துஅரங்கேறும்.
- தெருக்கூத்தைபற்றிகலைக்களஞ்சியத்தில்; "எளியமுறையில்அதேசமயம்மக்களுக்குநீதிபுகட்டும்கலையாகதெருகூத்துதிகழ்ந்தது " என்றுகுறிப்பிட்டள்ளது. தெருக்கூத்துஆடப்பெரும்இடம்நிகழ்வோடுசம்பந்தப்பட்டது.
- கோவிலோடுதொடர்புடையகூத்துகள்திறந்தவெளியில்மின்விளக்குஇல்லாதமுச்சந்திகளில்நடைபெறும்.
- குடும்பத்தில்யாரேனும்இறந்துபோனால்அக்குடும்பத்தாரின்வேண்டுகோளுக்கேற்பகர்ணமோட்சம்என்றசிலகூத்துகளைஆடுகின்றனர்.

- தெருக்கூத்துஎன்றகலைக்குகட்டைகட்டியாடும்நாடகம்என்கிறவிளக்கமும்உண்டு. மினுங்கும்கட்டையால்ஆனஆடைஅணிகலன்கள்அணிந்துபாடிஆடுவதேதெருக்கூத்து.

- ஆண்கள்மட்டுமேஆடிவந்தகூத்தின்பின்னாட்களில்பெண்களும்ஆடிவந்தனர்.
- காலம்செல்லச்செல்லதெருக்கூத்தின்கருவும்சமுதாயமுன்னேற்றக்கருத்துக்களைவெளிப்படுத்தும்விதமாகமாறியது.
- கூத்துதொடங்கும்முன்புநாட்டுக்கும்நாட்டுமக்களுக்கும்வந்தனம்செலுத்தும்பாடல்பாடப்படும்.
- சித்தூர்மக்களின்வந்தனபாடலுகு சான்று :

“நாடகக்கலைக்குபெரும்நல்லாதரவு
தந்தநாட்டுமக்களுக்குஒருவணக்கம்!
நாட்டுமக்களிடம்நல்லதோர்பாடுபடும்
நாட்டுமக்களுக்கோர்வணக்கம் !
பாட்டுக்கொருஒருபாரதியார்
ஏட்டுக்கொருவள்ளுவனார்நின்ற
தமிழர்க்கோர்வணக்கம்!
ஏரோட்டும்மக்கள்துயர்போராட்டம்
தீர்த்துவைக்கும்ஈ.வே.ரா.பெரியார்க்குஓர்வணக்கம்! “

- கட்டியங்காரன்சான்றுபாடல்
“தட்டிஜல்லடம்கட்டி
தடியுடன்பிரம்புக்கோலும்
அஷ்டதிக்குப்பாலகர்அங்கங்கும்எச்சரிக்க
மட்டில்லாகீர்த்திபெற்ற
மன்னன்துரியன்வாசல்காக்கும்
ஜல்மீசைமுருக்கிகட்டியக்காரனும்வருகிறானே” பாட்டு
வந்தானாநல்லாபாருங்ககட்டியக்காரன்
வாரான்னுசொல்லப்பாரிங்க
அக்கீனிச்சரங்கொடுத்து
அறையில்கச்சை
அழகானஆடையுடுத்தி
குந்திகுந்திநடைநடந்து
கோணகுலாவும்பொட்டுவைத்து ( வந்தான்நல்லாபாருங்க )

ட்டுப்புறக்கலைகளில்குறிப்பிடத்தக்கபொழுதுபோக்குநிகழ்வாகச்சிறந்துவிளங்குவதுதெருக்கூத்தாகும். தெருக்கூத்தென்பதுநாடோடிக்கூத்துவகையைச்சார்ந்ததாகும்.

தெருக்கூத்துக்குநாடகமேடையோகாட்சித்திரைகளோஇல்லாமல்எளியமுறையில்தெருவிலும்திறந்தவெளிகளிலும்நடைபெறும்.
இரவுமுழுவதும்தெருக்கூத்தைக்கண்விழித்துப்பார்த்துமகிழ்ந்துசெல்வர்.
இக்கூத்துப்பெரும்பாலும்காப்பிய,

இதிகாசபுராணக்கதையைஅடிப்படையாகக்கொண்டுஎளியமுறையில்அமைந்திருக்கும். பொதுமக்களுக்குத்தெருக்கூத்துஒருநல்லபொழுதுபோக்காகஅமைந்திருப்பதோடுநீதிபுகட்டும்வாயிலாகவும்உள்ளது.

கூத்துஎன்னும்சொல், நாட்டியம், நாடகம்ஆகியஇருகலைகளுக்கும்பொதுவானதாகவேவழங்கப்பெற்றுள்ளது. இன்றைக்கும்‘கூத்து’, நாடகம், ஆட்டம்என்றுபலபெயர்களில்அழைக்கப்பட்டபோதிலும்தெருமுனைகளில்திறந்தவெளியில்அறிமுகப்படுத்திக்கொள்ளல், கதைக்கூறல், மங்களம்பாடுதல்எனமரபுவழிமுறைகள்பின்பற்றப்படுகின்றன. நாடகம்என்றசொல்லும்தெருக்கூத்துக்கலையைக்குறிக்கமக்களால்மிகுதியாகப்பயன்படுத்தப்படுகிறது. இக்கலையிலிருந்துகிளைத்துஇக்கலையோடுநெருங்கியதொடர்புடையதாகக்காணப்படுவதும். இதுவடஆற்காடு, செங்கற்பட்டு, கடலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, மதுரைமாவட்டப்பகுதிகளில்செல்வாக்குடன்திகழ்கிறது.

தெருக்கூத்துஎன்றசொற்கள்ஒரேபொருளில்வழங்கப்படுகின்றன. தெருக்கூத்துசென்னை, செங்கற்பட்டு, வடஆற்காடு, திருவண்ணாமலை, தருமபுரி, சேலம், விழுப்புரம், கடலூர்மாவட்டங்களில்மிகுதியாகநிகழ்த்தப்படுகின்றன. தங்கள்ஊர்களில்மட்டும்கூத்துக்கள்நிகழ்த்தும்தொழில்முறைஅல்லாதகுழுக்கள்பலஉண்டு. இவையேஇன்றிதொழில்முறைத்தெருக்கூத்துக்குழுக்கள்நூற்றுக்கணக்காகஉள்ளன.

அவைநாடகசபா, நாடகக்குழு, நாடகமன்றம், தெருக்கூத்துசபாஎன்னும்பலபெயர்களில்இயங்குகின்றன. கோவில்விழாக்களின்போதுவழிபாட்டுச்சடங்கின்ஒருபகுதியாகத்தெருக்கூத்துநிகழ்த்தப்படுகிறது. இந்தக்கோயில்விழாக்களின்போதுவழிபாட்டுச்சடங்கின்ஒருபகுதியாகத்தெருக்கூத்துநிகழ்த்தப்படுகிறது. இந்தக்கோயில்விழாக்களின்போதுதினமும்இரவில்பாரதி (பாரதவாத்தியார்அல்லதுபாரதப்பூசாரி) பாரதக்கதையைமக்கள்முன்எடுத்துரைப்பார்.

பம்பை, தாளம்முதலானஇசைக்கருவிகளுடன்பின்பாட்டுப்பாடுபவரும்இருப்பர். பாரதிபாடஇவர்கள்இசைக்கருவிகளைஇசைத்துப்பின்பாட்டுபாடுவர். இடையிடையேபாரதிபாரதக்கதையைவிவரித்துக்கூறப்பின்பாட்டுக்குழுவினர்ஆமாம்போடுவர். இந்நிகழ்ச்சிஒருமாதம்அல்லதுஅதற்குமேலும்தொடர்ந்துநடைபெறும். இந்தநிகழ்ச்சியின்போதுஅர்ச்சுனன்வில்வளைப்பு, திரௌபதைக்கல்யாணம், மாடுபிடிசண்டை, அரவான்களப்பலிவேடமிட்டுநிகழ்த்திக்காட்டப்படும்.

மக்கள்இந்நிகழ்த்துதல்களைப்பக்தியுடன்கண்டுகளிப்பர். இச்சூழலில்பாரதக்கதையின்பல்வேறுபகுதிகள்தெருக்கூத்தாகநிகழ்த்தப்படும்.

சிலநேரங்களில்கோவில்திருவிழாவின்போதுபொழுதுபோக்கைநோக்கமாகக்கொண்டு கோயிலோடுதொடர்பில்லாததெருக்கூத்துக்கள்நிகழ்த்தப்படுவதுண்டு. சடங்குச்சூழலில்நடத்தப்படும்பாரதக்கூத்துக்கள்உள்ளிட்டபலகூத்துக்கள்பொழுதுபோக்குக்காகநிகழ்த்தப்படும். வன்னியநாடகம்வன்னியர்களிடமும், அரிச்சந்திரநாடகம்அரிசனமக்களிடையேயும்நிகழ்த்தப்படுவதைக்கடலூர், விழுப்புரம்மாவட்டங்களில்காணமுடிகின்றது. அரிசனமக்கள்அரிச்சந்திரன்நாடகத்தைவிருப்பத்துடன்நடத்துவதைதஞ்சைமாவட்டப்பகுதிகளிலும் காணமுடிகிறது. இராமாயணம்தொடர்பானதெருக்கூத்துக்களும்வழிபாட்டுச்சடங்குஅல்லாதசூழல்களில்நிகழ்த்தப்படுகின்றன.

இறாப்புச்சடங்கிலும்தெருக்கூத்துநிகழ்த்தப்படுவதைக்காணமுடிகிறது. இறந்தபதினாறாம்நாள்சடங்கின்பதினைந்தாம்நாள்இரவுவிடியவிடியகண்விழிக்கவேண்டும். அப்போதுவிடியற்காலைவரைகோவிலன்நாடகம், கர்னமோட்சம், அரிச்சந்திராமுதலானதெருக்கூத்துக்கள்நிகழ்த்தப்படுகின்றன.

தெருக்கூத்தில்ஆடுவோரின்எண்ணிக்கைவரையறைகுழுவுக்குக்குழுமாறுபடுகின்றது. நாடகசபாவினர்இக்குழுவில் 18 பேர்இடம்பெற்றிருந்தனர். ஐயனார்திருக்கல்யாணம்என்னும்தெருக்கூத்துக்குழுவில் 17 பேர்இடம்பெற்றிருந்தனர். தருமபுரிமாவட்டம்மேகலசின்னம்பள்ளி, ஸ்ரீபாலசரஸ்வதிநாடகக்குழுவில் 20 பேர்களும்ஒருதெருக்கூத்தில்குறைந்தது 10 பேர்ஆடக்கூடியவர்களாகஇருப்பர். பலகுழுக்களில்இவர்கள்வெவ்வேறுஊர்களைச்சேர்ந்தவர்களாகஇருப்பர். பெரும்பாலும்கூத்துவாத்தியார்ஒருங்கிணைப்பாளராகச்செயல்படுவார். புரட்டாசிமாதம்விசயதசமிஅன்றுநாடகக்காரர்களுக்குமுக்கியமானநாள்என்றுமுருகுவேல்விழிநாடகசபாவாத்தியார்கோவிசடகோபன்கூறினார். ஐந்துதலைமுறைகளாகத்தெருக்கூத்துஆடிவரும்குடும்பத்தைச்சார்ந்தவர்இவர். விசயதசமிஅன்றுவாத்தியார்ஊரில்கூத்துநடத்தப்படும். போகிஅன்றும்இவ்வாறுநடத்தப்படும். ஆட்டக்குழுவில்பல்வேறுவயதுடையவர்கள்இடம்பெற்றிருப்பர். பாத்திரங்களின்தன்மைக்கேற்பஇவர்களுக்குவேடங்கள்பிரித்துத்தரப்படும். வேடப்பொருத்தமும்ஆடும்திறமையும்குரல்வளமும்இருப்பவர்களுக்குவயதுதடையாகஇருப்பதில்லை.

தெருக்கூத்துக்கள்இடத்துக்குஇடம்மாறுபடுகின்றன. இந்தமாற்றங்கள்பொருண்மை, இசைக்கருவிகள், ஆட்டமுறைகள், ஒப்பனை, ஆடுகளம், மேடையமைப்புமுதலானவற்றில்வெளிப்படுகின்றன. இந்தவேறுபாடுகளைக்கருத்தில்கொண்டுமக்களேதெருக்கூத்தினைத்தெற்கத்திநாடகம், வடக்கத்திநாடகம்என்றுபிரிக்கின்றனர். கடலூர்மாவட்டம், சிதம்பரம்வட்டம்மற்றும்அதற்குத்தெற்கேயுள்ளபகுதிகளில்நடைபெறும். கூத்துக்கள், தெற்கத்திநாடகம்என்றுசுட்டப்படுகின்றன. ஆற்றுப்பாசனம்உள்ளசெழிப்பானபகுதிகளில்இவைநடைபெறுகின்றன. இதில்இராமாயணநாடகங்களும்அரிச்சந்திரநாடகம்கோவலன்நாடகம்போன்றவைஇடம்பெறுகின்றன. நாடகத்தையேநம்பிவாழ்க்கைநடத்துவோரும்உண்டு. மொழிஎல்லைகடந்துதெருக்கூத்துபோற்றப்படுவதைஅறியமுடிகிறது. இவ்வாறுதமிழகத்தில்நிகழ்த்தப்படும்வெவ்வேறுதெருக்கூத்துகளுக்கேற்பவும்நிகழ்த்தப்படும்கதைகளுக்கேற்பவும்ஒப்பனைமாறுபடுவதைக்காணமுடிகின்றது.

நிகழ்த்தப்படும்கதைக்குஏற்பவும்கதாபாத்திரங்களின்குணநலன்களுக்கேற்பவும்முகப்பூச்சு ஒப்பனைவேறுபடுகின்றன. ஒப்பனைசெய்யும்போதுமுகஒப்பனைமுதலில்செய்யப்படுகிறது. சூரன், அரக்கன், காளிபோன்றவேடங்களுக்குமுதலில்முகத்திற்குமுத்துவெள்ளை, செந்தூரம்கலந்துநல்லெண்ணெய், மனிலாஎண்ணெயில்குழைத்துப்பூசுகிறார்கள். ஆனால்இந்தவேடங்களுக்குவெள்ளையைமிகக்குறைவாகவும்செந்தூரம் (சிவப்பு) அதிகமாகவும்கலந்துபூசுகிறார்கள். முகத்தைப்பார்த்தால்சிவப்பாகஇருக்கும்.

தெருக்கூத்தில்பல்வேறுவயதுடையவர்கள்இடம்பெற்றிருப்பர். பாத்திரங்களின்தன்மைக்கேற்பஇவர்களுக்குவேடங்கள்பிரித்துத்தரப்படும். ஆந்திரஎல்லையையொட்டியுள்ளதருமபுரிமாவட்டத்தெருக்கூத்துக்கள்உடை, ஒப்பனைமற்றும்ஆட்டமுறைகளால்மாறுபடுவதைக்காணமுடிந்தது. ஆந்திரவிதிநாடகமும்தமிழ்த்தெருக்கூத்தும்ஒன்றுக்கொன்றுவளம்பெற்றுவருவதையும்அறியமுடிகின்றது. தமிழகத்திலேயேதெலுங்குமக்கள்மிகுதியாகவாழும்பகுதிகளில்தெலுங்குகூத்துகள்தொடர்ந்துநடைபெற்றுவருவதைபாலசரஸ்வதிநாடகக்குழுவைச்சேர்ந்தபாப்பன்னச்செட்டியார்கூறினார். இக்குழுவில்உள்ள 20 பேர்களில் 5 பேர்தமிழ்தெலுங்குமொழிஅறிந்தவர்கள்என்றும்எனையோர்தமிழ்மட்டுமேதெரிந்தவர்என்றும்தமிழில்தெலுங்கைஎழுதித்தந்துபயிற்சிஅளிக்கப்பட்டது.

ECONSPEAK: A Journal of Advances in Management IT & Social Sciences,
Vol. 11, Issue 12, December 2021 Impact Factor 8.132 ISSN: (2231-4571)
www.skirec.org Email Id: skirec.org@gmail.com
An International Double-Blind, Peer Reviewed, Refereed Open Access Journal - Included in the International Indexing Directories

ஆந்திரப்பகுதிகளில்தெருக்கூத்துஆடுவர்என்றும், மொழிபுரியாவிட்டாலும்ஆந்திரமக்கள்தமிழ்த்தெருக்கூத்தைவிரும்பிஇரசிப்பர். ஆந்திரத்திலிருந்துநாடோடிக்குழுக்களாகத்தமிழகம்வந்துதெலுங்குகூத்துநடத்திமக்களிடம்சன்மானம்பெற்றுதெருக்கூத்தில்ஆர்மோனியம்முக்கியத்துவம்பெறுகிறது. இரண்டுதாளங்கள், ஒருடோலக்ஒருமிருதங்கம், ஒருதபேலாமுதலானஇசைக்கருவிகள்பயன்படுத்தப்படுகின்றன. இசைக்கருவிகள்குழுவிற்குக்குழுசிறிதளவுமாறினாலும்ஆர்மோனியம், தாளம், மிருதங்கம்முதலியனமுக்கியஇடம்பெறுகின்றன.

இந்தஇசைக்கருவிகளைவாசிக்கும்கலைஞர்கள்கூத்தாடும்களத்திலேயேஓரமாகஅமர்ந்திருப்பர். தெருக்களிலோஅல்லதுவயல்களிலோஅல்லதுமைதானம்போன்றவற்றிலோஇவர்கள்கூத்தாடுகின்றனர். நாடகசபாவின்பெயர்எழுதியதிரைச்சிலையைக்கூத்துஆரம்பிக்கும்போதுஇருவர்பிடித்துக்கொள்வர். சிலகுழுக்களில்அந்தந்தஊர்களில்கிடைக்கும்போர்வைஅல்லதுசமுக்காளம்திரைச்சிலையாகப்பயன்படுத்தப்படுகின்றது. மின்சாரம்இல்லாதஊர்களில்பெட்ரோமாக்ஸ்விளக்குபயன்படுத்தப்படும். நாற்சந்தியில்தெருக்கூத்துக்கள்நிகழ்த்தப்படும்போதுஒருதெருவில்ஆடுகளம்அமைந்திருக்கஏனையமூன்றுமூன்றுதெருக்களிலும்பார்வையாளர்கள்அமர்ந்திருப்பர்.

தெருக்கூத்துதமிழகத்தின்தொன்மையானஆட்டக்கலையாகும். தெருக்கூத்தைக்கற்றுக்கொள்வதற்குத்தனிப்பள்ளிகள்ஏதுமில்லை. தெருக்கூத்தைக்கற்றுக்கொள்ளதேர்ச்சிஉள்ளகூத்துவாத்தியார்ஒருவரைஊருக்குஅழைத்துகூத்துகற்றுத்தருமாறுவேண்டுகின்றனர். தினமும்பெரும்பாலும்இரவுவேளைகளில்கூத்துகற்றுத்தரப்படுகிறது. தெருக்கூத்துஆடும்கலைஞர்களில்மிகுதியானவர்கள்வள்ளியர்களைஆயினும்தெருக்குழுக்களில்பல்வேறுசாதியினரும்இடம்பெற்றிருந்தைப்பரவலாகக்காணமுடியும். தெருக்கூத்துக்குரியநடனஅடவுகள்பயிற்சிக்காலத்திலேயேகற்றுக்கொடுக்கப்படுகின்றன. நடனமாடும்திறமையைப்பெற்றபின்னரேபயிற்சியாளரைஆடஅரங்கினுள்அனுமதிக்கின்றனர். கைமுத்திரைகள்மூலம்விளக்குதல், அங்கஅசைவுகள்கிறுக்கிசுற்றுதல்மூலம்பாத்திரத்தின்தன்மையைவெளிப்படுத்துதல்போன்றவைபயிற்சியின்போதுகற்றுக்கொடுக்கப்படுகின்றன. பாத்திரஅறிமுகம், உணர்ச்சிவெளிப்பாடுகள், பாத்திரத்தின்பண்புகள்ஆகியவைநடனஅடவுகளின்மூலம்வெளிப்படுகின்றன.

தெருக்கூத்துகலைஞர்களைத்தொழில்முறைக்கலைஞர், பயில்முறைக்கலைஞர், இனவழிக்கலைஞர்எனமூன்றுநிலைகளில்பகுக்கின்றனர். தொழில்முறைக்கலைஞர்கள்முழுநேரக்கூத்தர்கள்,

ECONSPEAK: A Journal of Advances in Management IT & Social Sciences,
Vol. 11, Issue 12, December 2021 Impact Factor 8.132 ISSN: (2231-4571)
www.skirec.org Email Id: skirec.org@gmail.com
An International Double-Blind, Peer Reviewed, Refereed Open Access Journal - Included in the International Indexing Directories

கூத்தில்லாதகாலங்களில்மட்டும்பிறதொழில்களைசெய்கின்றனர். பயில்முறைக்கலைஞர்கள்தெருக்கூத்தையும், பிறதொழில்களையும்செய்பவர்கள். இவர்கள்பரம்பரைக்கலைஞர்அல்லர். இனவழிக்கலைஞர்கள்தங்களுடையஊர்களில்உள்ளகோவில்களில்மட்டும்கலைநிகழ்த்தப்படுபவர்கள். இவர்கள்பெரும்பாலும்பிறஊர்களுக்குக்கலைநிகழ்த்தச்செல்வதில்லை. இவர்கள்குறிப்பிட்டகாலத்தில்மட்டும்ஆடுபவர்கள்.

கூத்தாடக்கற்றபின்ஏதேனும்ஒருதிருவிழாவில்அரங்கேற்றமும்நிகழும்இந்தஅரங்கேற்றத்தின்போது, அரங்கேறியகலைஞர்களுக்குஉறவினர்கள்புதுத்துணி, நகை, பணம்போன்றவற்றைப்பரிசாகக்கொடுப்பர்.

தெருக்கூத்துநாடகத்தன்மைஉடையது. இதற்குஎன்றுகாட்சிஜோடனைகளோபகுப்புகளோஇல்லாதது. குறிப்பிட்டகாலவரையறைக்குள்முடியவேண்டும்என்றநிலையில்உருவாக்கப்பட்டகூத்துக்கதைகள்பெருமளவில்இல்லை.

தெருக்கூத்தின்தொடக்கக்காட்சிமுதல்இறுதிவரைகதைகூறும்போக்குசெய்யுள்களாலேயேபெரிதும்அமைந்திருக்கும். இசையுடன்பாடப்படும்இப்பாடல்களைக்கதைத்தொடர்புப்பாடல்கள், உதிரிப்பாடல்கள்எனவகைப்படுத்தலாம். கதைத்தொடர்பானபாடல்களில்பெரும்பாலும்முந்தியபரம்பரையினர்எழுதிவைத்தவைமுன்புஎழுதிவைக்கப்பட்டவற்றில்திருத்தப்பட்டவை, புதிதாகஎழுதியவைஎன்றுமூன்றுவகைகள்உள்ளன. பாடல்களைஅடுத்துப்பேசப்படும்வசனம்கலைஞர்களின்மனநிலை, திறமையைப்பொறுத்துஅமையும். கோவில்விழாவில்முதல்நாள்கூத்துதொடங்கப்போவதைக்குறிக்கும்வகையில்எல்லாஇசைக்கருவிகளையும்ஒருசேரஇசைப்பர். இதனைக்'களரிகட்டுதல்'என்பர். பாடல்களும்கலைஞர்களால்ஒருசேரப்பாடப்படும். இறைவணக்கப்பாடலும், குறிப்பிட்டதெய்வத்திற்குரியதாகஇருக்கவேண்டும்என்றகட்டாயம்இல்லை. இதையடுத்துவிநாயகர்துதிஆரம்பமாகும். விநாயகராகக்கலைஞர்ஒருவர்வேடமிட்டுஆடுபரப்பில்வருவார். விநாயகர்முகமூடியைஅணிந்துகொண்டோஅல்லதுவிநாயகர்உருவப்பொம்மையைவைத்துக்கொண்டோவிநாயகர்துதிபாடப்படும். குருக்கள்வரவுகுறித்தபாடலும்அப்போதுபாடப்படும்.

விநாயகர்துதிமுடிந்ததும்அவையடக்கப்பாடலைப்பாடுவர். இப்பாடலைக்கூத்தைஉருவாக்கியஆசிரியரோகுழுவின்தலைவரோபாடுவார். கதையின்சொற்குற்றம், பொருட்குற்றம்பொறுக்கவேண்டியும்,

ECONSPEAK: A Journal of Advances in Management IT & Social Sciences,
Vol. 11, Issue 12, December 2021 Impact Factor 8.132 ISSN: (2231-4571)
www.skirec.org Email Id: skirec.org@gmail.com

An International Double-Blind, Peer Reviewed, Refereed Open Access Journal - Included in the International Indexing Directories

பாடலைஇயற்றியஆசானின்ஊர்பேர்ஆகியவற்றையும்குழுவின்முகவரியையும்கூறுவார். கூத்தின்இறுதிப்பகுதியில்மங்களம்பாடுதல், வாழிவிருத்தம், வசனம்ஆகியனஇடம்பெறும். இப்பகுதியில்கூத்தைஇயற்றியவர். கேட்டவர், கண்டவர், ஆடியவர்ஆகியோருக்குவாழ்த்துக்கூறுவர். இதுபாடலாகவோஉரைநடையாகவோஅமையும். கூத்துக்கலைஞர்கள்கதைகளுக்குஅப்பால்பலசெய்திகளைநிகழ்த்துதலின்போதுசொல்லிச்செல்வர். கூத்துநிகழும்ஊரில்அல்லதுஅருகிலுள்ளஊர்களில்நடைபெற்றநிகழ்வுகளையும்அரசியல்நிகழ்வுகளையும்கூத்தில்எடுத்துரைப்பர். பெரும்பாலும்கட்டியங்காரனேஇதனைச்செய்வார். அவர்சொல்லும்தகவல்கள்இயல்பாகஇருப்பதால்பார்வையாளர்களைஎளிதில்சென்றடையும்.

பலதொண்டுநிறுவனங்களும், அரசுசார்ந்தநிறுவனங்களும்தெருக்கூத்தைப்பிரச்சாரத்திற்காகப்பயன்படுத்துகின்றன. ‘கல்லாசுரன்சம்காரம்’, ‘கல்விக்கரசன்பட்டாபிசேகம்’, நோய்அரக்கன்வதை, ‘மதுவரக்கன்கதை’போன்றபிரச்சாரக்கதைகள்தற்போதுநிகழ்த்தப்படுகின்றன. தற்காலக்கலைவடிவங்களின்உருவாக்கத்திற்குத்தெருக்கூத்துஅடிப்படையாகஇருந்துள்ளது. சங்கரதாஸ்சுவாமிகள்தெருக்கூத்துமுறைகளைப்பின்பற்றியேஅவரதுநாடகஉத்திமுறைகளும்அவர்உருவாக்கியநாடகங்களும் (ஸ்பெஷல்) தனிநாடகமாகஉருப்பெற்றன.

தமிழ்த்திரைப்படத்தின்தாக்கமும்தெருக்கூத்தினைப்பாதித்துள்ளதுஎன்பதுகுறிப்பிடத்தக்கது. அதன்அடிப்படையிலேயேநாடகம்போன்றகலைவடிவங்கள்தோற்றம்பெற்றன.